அ.வ.எண்.90/2024 தேதி:08.07.2025

வா.சா.1 கிருஷ்ணகுமார் த/பெ.பொன்னையன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் விவசாயம், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகின்றேன். எனக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 3–1/2 ஏக்கர் உள்ளது. என் விவசாய நிலத்தில் என்ன பயிரிட்டுள்ளேன் என்றால் தென்னை, பருத்தி, மக்காசோளம், மாட்டு தட்டு சோளம். பிரதிவாதி செங்கோடனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 30 வருடங்களாக தெரியும். பிரதிவாதி செங்கோடனின் தொழில் தென்னை மரங்களை குத்தகை எடுத்து அறுவடை செய்வது என்றால் சரிதான். பிரதிவாதி செங்கோடன் எங்கள் ஊரில் நிறைய தென்னை மரங்களை குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

2) என் தென்னை மர தோப்பையும் பிரதிவாதி செங்கோடன்தான் குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை. என் தென்னை தோப்பையும் பிரதிவாதி செங்கோடன்தான் 6 வருடங்களாக குத்தகைக்கு எடுத்து அறுவடை செய்து வந்தார் என்றால் இல்லை. அதுதான் உண்மை, இதை ஒப்புகொண்டால் இவ்வழக்கிற்கு பாதகமாகும் என்பதற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக தென்னை மரங்களை குத்தகைக்கு எடுப்பவர்கள் அறுவடை செய்து விற்பனை செய்த பிறகே குத்தகை தொகையை கொடுப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3) பிரதிவாதி செங்கோடன் என்னிடம் தென்னை மரங்களை குத்தகைக்கு பெற்றிருந்தார் என்றாலும், அதற்காகதான் அறுவடையின்போது பாதுகாப்பிற்காக இரண்டு கடனுறுதி சீட்டுகளை கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. பிரதிவாதி செங்கோடன் என்னிடம் தொழில் செய்தபோது இரண்டு வருட குத்தகைக்கு பணம் ரூ.1,50,000/– கொடுக்கவேண்டியிருந்ததாலும், சிறிது காலம்கழித்து அதனை கொடுப்பதாக தொழில் நெருக்கடியால் பிரதிவாதி கூறியிருந்த நிலையில், என்னிடம் பாதுகாப்பிற்காக கொடுத்திருந்த இரண்டு கடனுறுதி சீட்டுகளில் ஒன்றினை பயன்படுத்தி வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

4) என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் பிரதிவாதி செங்கோடன் எக்காலத்திலும் என்னிடம் கடன் கேட்கவில்லை என்றாலும், சொல்லப்பட்டுள்ள

நாளிலோ எந்த தொகையையும் என்னிடம் கடனாக பெறவில்லை என்றாலும், அதற்கு எவ்வித கடனுறுதி சீட்டு முறையாக நிறைவேற்றி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு விவசாயத்தில் வருடத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றாலும் ரூ.6 லட்சம் முதல் 8 லட்சம் வரை வருமானம் வரும். மூன்றரை ஏக்கர் நிலத்தில் 6 லட்சத்திற்கு வருமானம் வருவதாக நான் கூறுவது பொய், அதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. ரூ.8 லட்சம் வரை விவசாயத்தில் எனக்கு வருமானம் வருவதற்கு கணக்கு வழக்குகள் உள்ளதா என்றால் விவசாயத்தில் இல்லை, சில்லரை வியாபாரம்தான்.

5) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக கூறுவதற்கு கணக்கு வழக்குகள் உள்ளதா, வருமானம் வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை, நான் இடைதரகராகதான் உள்ளேன். நான் ரியல் எஸ்டேட் இடைதரகராக உள்ளதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு கடனுறுதி சீட்டுப்படி எந்த தொகையும் கைமாறவில்லை, எனக்கு சாதகமானவர்களை வைத்து கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.